ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

यातं दिनमिदमेवं श्वः किल भविता सुमेरुरपि हस्ते ।
इति नित्यं भावयता भवता कति चित्त मेरवो लब्धाः ॥

யாதம் தி3னமித3மேவம் ச்வ: கில ப4விதா ஸுமேருரபி ஹஸ்தே
இதி நித்யம் பா4வயதா ப4வதா கதி சித்த மேரவோ லப்3தா4: ॥

इदं—இந்த
दिनं—நாள்
एवं—இம்மாதிரி
यातं—சென்றுவிட்டது.
श्वः किल—நாளைக்கல்லவா
सुमेरुरपि—மேருபர்வதமும்
हस्ते—(நமது) கைவசமாக
भविता—வரப்போகிறது.

इति—இந்தப்பிரகாரமாக
नित्यं—தினந்தோறும்
भावयता—எண்ணிக்கொண்டிருக்கும்
भवता—உன்னால்
कति—எவ்வளவு
मेरवः—மேருபர்வதங்கள்
हे चित्त—ஓ மனமே
लब्धाः—அடையப்பட்டன.

அடா மனமே! நினைக்கத்தகாததும், நினைத்து நினைத்துப் பார்த்தாலும் கிட்டாததும், கிட்டினாலும் பயன்படாததும், ஒருவாறு அற்பபயனுக்குதவினாலும் காலக்கிரமத்தால் அழிந்து போகக்கூடியதானதுபற்றி துக்கத்தையே முடிவில் விளைவிப்பதுமான விஷயங்களையே அல்லும் பகலும் தியானித்துக்கொண்டே இருக்கின்றாயே. நீ தியானித்ததால் மாத்திரம் கிடைத்துவிடுமா? கிடைக்காதபோது "இன்றையதினம் என்னவோ இப்படியாய் விட்டது. நாளைதினம் பாருங்கள்; இந்தவஸ்து மாத்திரமல்ல. மேருபர்வதம்கூட நமது கைவசமாக வரப்போகின்றது" என்று ஸமாதானமடைகின்றாய். மீண்டுமதனையே தியானிக்கின்றாயே. இந்தப்பிரகாரமாக ஒவ்வொரு தினத்திலும் கடந்த நெடுநாளாக நினைத்துக்கொண்டு வந்தாயல்லவா உனது நினைவுபடி இதுவரை எவ்வளவு மேருபர்வதங்கள் உனக்குக்கிடைத்திருக்கின்றன? ஒன்றையும் காணோமே. அப்படியிருக்க வீணாக விஷயங்களை நினைந்து நினைந்து என் வருந்துகின்றாய். இனிமேலாவது அப்படிச் செய்யாதே. எது தியானிக்கத்தக்கதோ; எதனுடைய தியானத்தால் மற்றக்கவலை நீங்குமோ; துக்கம் விலகுமோ; சாசுவதமான புருஷார்த்தம் கிடைக்குமோ; அதனையே தியானித்து சாந்தியடைவாயாக.

பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
பிரபவ-ஸு அற்பசி-மீ ௧௮௨

# ஸம்ஸ்காரம்.

## 5-வது நாமகர்ணம்.

(534-வது பக்கத்தொடர்ச்சி)

நாமகரணமென்பது பெயரிடுவதாம். இது கர்மாதிகாரம் பெற்றவர்களுக்கு முக்கியமானதாம். திதி வார நக்ஷத்திராதிகளை நன்றாக சோதித்து சுபமான திதி வார நக்ஷத்திர யோக கரணங்களோடுகூடிய சுபமுஹூர்த்தத்தில் இதைச் செய்யவேண்டியது. 11-வது நாளிலாவது, 10-வது நாளிலாவது, 100-வது நாளிலாவது, வருஷமுடிவிலாவது செய்யலாம். இதைப் பிதாவே செய்யவேண்டியது. பிதா இல்லாவிட்டாலும், இருந்துமிதைச்செய்ய யோக்கியதையில்லாவிட்டாலும் அந்த வம்சத்தில் யோக்கியரான ஒரு பெரியவரைக் கொண்டாவது அவசியம் செய்யவேண்டியது. அவரவர்களது குலதேவதையின் ஸம்பந்தமுடையதாகவோ, நக்ஷத்திரஸம்பந்தமுடையதாகவோ பெயரிடவேண்டும். சிசுவிற்கும ஸ்நானம் செய்துவைத்து, ஸ்நானம் செய்து சுத்தர்களாயிருக்கும் மாதாபிதாக்களிருவரும் குழந்தையை முந்திய சயனத் (படுக்கை)திலிருந்து வேறு இடத்தில் வைத்துக்கொண்டு, அங்கு பிதிருக்களின் ஸாந்நித்யமுண்டாகின்றதாகையால் அந்த பிதிருக்களையுத்தேசித்து நாந்திசிராத்தம்செய்து நாமகரணம் செய்யவேண்டியது. அந்த நாமத்தின் (பெயரின்) ஸ்வரூபம் ஸ்மிருதிகளிலும் அவரவர்களது கிருஹ்யஸூத்திரங்களிலும் விரிவாகக் கூறப்படுகின்றது. அதாவது புருஷப்பிரஜையாயிருந்தால் இரட்டைப்படையான எழுத்துக்களுள்ள (2,4,6 இம்மாதிரி எழுத்துக்களுள்ள)தும், திரவியத்தைக்கூறும் பெயர்ச்சொல் முதல்பாகத்திலும், கிரியையைக் காட்டும் சொல் பின்பாகத்திலுமுள்ளதும், முடிவில் தீர்க்கமும் விஸர்க்கமும் வரக்கூடியதும், கோஷமெனப்படும் பாஹ்யப்பிரயத்தினமுள்ள எழுத்து ஆதியிலும் ய, ர, ல, வ

என்ற எழுத்துக்கள் நடுவிலும் வரக்கூடியதும், ஆகிய இப்பெயரிடவேண்டும். இரண்டெழுத்துள்ள பெயருக்கு गीर्दाः கீர்தா:, यार्दाः வார்தா:" என்பது முதலியவை உதாஹரணமாகும். நான்கெழுத்துள்ள பெயருக்கு "हिरण्यदाः ஹிரண்யதா:, अवनिदाः அவநிதா:" என்பது முதலியன உதாஹரணமாகும். அல்லது ஸு என்கிற உபஸர்க்கமெனப்படுமெழுத்துள்ளபெயர் மிகச்சிறந்ததாம். அல்லது ரிஷிகளின் பெயரும் தேவதைகளின்பெயரும் அவரவர்களின்வம்சத்தின்பூர்வபுருஷர்(முன்னோர்) களின் பெயரும் வைக்கலாம். இவைகளுக்கு முறையே सुदर्शनः ஸுதர்சந: ஸுதர்சனன், सुजातः ஸுஜாத: ஸுஜாதன், वसिष्ठः வஸிஷ்ட: வஸிஷ்டன், नारदः நாரத: நாரதன், नारायणः நாராயண: நாராயணன், वासुदेवः வாஸுதேவ: வாஸுதேவன், यज्ञशर्मा யஜ்ஞசர்மா யக்ஞசர்மா, सोमशर्मा ஸோமசர்மா, என்பவை உதாஹரணமாகும். ஸ்திரீ பிரஜையாயிருந்தால் ஒத்தப்படையான (1, 3, 5 இம்மாதிரியான) எழுத்துக்களுள்ளதும் இலகுவாய் உச்சரிக்கக்கூடியதும், குரூரமாயில்லாததும், முடிவில் தீர்க்கவர்ணமுள்ளதுமான பெயர் வைக்கவேணும். श्रीः, यशोदा, ஸ்ரீ:, யசோதா, இவைபோன்றவை உதாஹரணமாம். இம்மாதிரி பெயரிட்டால் அந்த வம்சம் சுத்தமாயிருக்கும். இதில் மற்றோர் விசேஷம் ஸ்மிருதிகளில் கூறப்படுகின்றது. அதாவது— பிராமணனாயிருந்தால் 'சர்மா' என்பதையும், க்ஷத்திரியனாயின் 'வர்மா' என்பதையும், வைசியனாயின் 'குப்த' அந்த நாமத்தில் சேர்த்துச் சொல்லிக்கொள்ள வேண்டும். இங்ஙனம் கூறும் ஸ்மிருதிகாரர்களின் அபிப்பிராயத்தையும், அதற்குமூலமான சுருதியின்கருத்தையும் ஆலோசித்துப் பார்த்தால் பிறந்ததுமுதற்கொண்டே ஜனித்த ஒவ்வொரு சரீரத்திற்கும் ஜாதி நிலைத்துவிடுவதாகத் தெரிகின்றது. பிறந்து வெகு நாள் கழித்து அச்சரீரத்தால் செய்யப்படும் தொழிலுக்குத்தக்கபடியும், அச்சரீரத்தை ஆச்ரயித்த மனதினிடம் அமையும் ஸத்துவாதிகுணங்களுக்குத் தக்கபடியும் ஜாதி ஏற்படுவதாகத் தற்காலத்திய சிலரது கருத்துக்கிணங்கியதாகக் காணப்படவில்லை. அங்ஙனமாயின் அந்த சுருதி ஸ்மிருதிகளில் பிராமணனாகவேண்டுமானால் இம்மாதிரி பெயரிடவேண்டும். க்ஷத்திரியனாகவேண்டுமா

னால் இம்மாதிரியென்றல்லவா கூறியிருக்கவேண்டும். அப்படி
அங்கு கூறப்படவில்லை. ஆனால் பிராமணனாயிருந்தால் இந்தப்
பெயர் க்ஷத்திரியனாயின் இந்தப்பெயரென்று ப்ராமண்யம் முந்தி
யே நிலைத்திருப்பதாகவும், அதையுத்தேசித்துப் பெயர் விதிக்கப்
படுவதாகவுந்தான் ஆங்கு காணப்படுகின்றது தற்காலத்திய
வேறு சிலர் — சுருதியையும், ஸ்மிருதிகளையும் காதால்கூட கேட்க
முடியாத நிலையில் தாங்களிருப்பதை முற்றிலும் மறந்துவிட்டு,
எங்கேயோ சில கதைகளைக் கேட்டுவிட்டு, அதனாலேயே தங்க
ளுக்கு ஸகல சுருதி ஸ்மிருதிகளின் உட்கருத்துந் தானாகவே
விளங்கிவிட்டதுபோல் நினைத்துக்கொண்டு, ‘ வேதகாலத்தில்
ஜாதிவேற்றுமையிருந்ததில்லை. பின்னிட்டுமிருக்க நியாயமில்லை.
ஆனால் சிலர் சுயநலத்தைக்கருதி பேதைபிராணிகளிடம் ஏமாற்றி
ஜாதிவேற்றுமை இருப்பதுபோலும், அது நெடுநாள் தொடருவது
போலும், வழக்கத்திற்குக் கொண்டுவந்துவிட்டார்கள். அதை
ஒருவரும் நம்பக்கூடாது ” என்று தங்களது இனத்தாரின் கூட்
டத்தில் சொல்லுவதோடு பத்திரிகைகளிலும் பிரசுரித்துவிடுகின்
றார்கள். அதை மறுத்தெழுத நமது பண்டிதர்கள் முன்வராத
தோடு பெரிய மௌனத்தையும் ஸாதித்துவிட்டிருப்பதாலும்,
யாரேனும் சிலராவது துணிந்து எழுதிவிட்டால் அதை அப்பத்தி
ரிகைகள் பிரசுரிக்கப் பிரியப்படாமலிருப்பதாலும், இவைகளைப்
பிரசுரிக்க வேறு தினப்பதிப்பான பத்திரிகையில்லாதபடியாலும்,
அந்தப்பத்திரிகைகளைப் பார்க்கும் நம்மவர்களும் அதையே வேத
வாக்குமாதிரி நம்பிவிடுகிறார்களென்றால் மற்றவர் விஷயத்தில்
கேட்கவேண்டுமா? ஆகவே 10-வது நாளிலோ, 11-வது நாளி
லோ பெயரிடுவதை விதிக்கவந்த சுருதி ஸ்மிருதிகள் ‘ பிராமண
னாயிருப்பவனுக்கு, க்ஷத்திரியனாயிருப்பவனுக்கு ’ என்று பிறந்
ததுமுதற்கொண்டே ஜாதி தொடருவதை ஸ்பஷ்டமாய் வெளி
யிடுகின்றது. குணங்களுக்கும் கர்மாவுக்குமேற்றபடி ஜாதி பின்
னிட்டு உண்டாவதாக நினைத்திருப்பவர்களுக்கு அது எத்தனை
நாளுக்குப் பிறகென்பதற்கும், அத்தகைய குணகர்மங்கள்,
யாவை, எவ்வளவு என்பதற்கும் பிரமாணமெடுத்துக்காட்டுவது
முடியாத கார்யம். அன்றியும் அதுவரை பிறந்த சரீரம் ஜாதி
யற்றதாகவே இருப்பதாகக்கொள்ளவேண்டும். அது பிரமாணங்
களுக்கு முற்றிலும் விரோதமாகும். ஆகையால் சுருதி ஸ்மிருதி

களின் கருத்திற்கிணங்கப் பிறந்ததுமுதற்கொண்டே ஜாதிநிலைத்திருப்பதாகக் கொள்ளவேண்டும் இதன் விரிவு மற்றோரிடம் காண்க. இங்கு மற்றோர் விசேஷமுண்டு. அதாவது— சிசு எந்த நக்ஷத்திரத்தில் ஜனித்ததோ அந்த நக்ஷத்திரப் பெயரும் அந்தக் குழந்தைக்கு ஜாதகர்மகாலத்திலேயே வைக்கவேண்டுமென்றும், அந்தப்பெயர் ரஹஸ்யமான பெயரென்றும், "तस्माद्विनामा ब्राह्मण: தஸ்மாத் த்விநாமா ப்ராஹ்மண:" "அதனால் பிராமணன் இரண்டுபெயருள்ளவனாகின்றான்" என்றும், இந்த நக்ஷத்திரப்பெயரும், 10-வது அல்லது 11-வது நாளில் வைக்கப்படும் பெயருமாகிய இவ்விரண்டு பெயர்களும் அன்னப்பிராசனம் முதலிய மேல்ஸம்ஸ்காரங்கள் செய்யப்படும்பொழுது சொல்லிக்கொள்ளவேண்டியது என்றும் கிருஹ்யஸூத்திரங்களிலும் ஸ்மிருதிகளிலும் கூறப்படுகின்றது நாமகரணத்தின் பிரயோகம் அவரவர்களது கிருஹ்யஸூத்திரத்திற் கூறியவாறு கண்டுகொள்ளவேண்டும். இதைப்பற்றிய மற்றோர் விசேஷம் அடுத்த ஸஞ்சிகையில் காண்க.

பத்திராதிபர்.

---

## லோககுரு ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி
# மஹிமப்பிரகடனம்.

श्रीमच्छङ्करदेशिकेन्द्रविभवं स्तोतुं फणीशोपि नो-
यद्वाचोविनिवर्तनं हि कथितं श्री तैत्तरीयादिषु ।
नन्तुं चापि गुरून्नतस्य विभव: यस्मात्सहस्राणिवा
गुक्तान्येव विचित्ररूपबहुलान्यस्मद्गुरुर्ब्रह्महि ॥

ஸ்ரீமச்சங்கரதேசிகேந்த்ரவிபவம் ஸ்தோதும் பணீசோபி நோ
யத்வாசோவிநிவர்தநம் ஹி கதிதம் ஸ்ரீதைத்தரீயாதிஷு ।
நந்தும் சாபி குரூந்நதஸ்ய விபவ: யஸ்மாத்ஸஹஸ்ராணிவா
குக்தாந்யேவ விசித்ரரூபபஹுலாந்யஸ்மத்குருர்ப்ரஹ்மஹி ॥

தற்காலம் ஸ்ரீ லோககுருவாய் எழுந்தருளியிருப்பவரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதியாயும் விளங்கும் ஸ்ரீசங்காகுருசாணுளுடைய குணாதிசயங்களைப்போற்ற ஸ்ரீ வியாகரண மஹா

பாஷ்யத்தை இயற்றியவரும் ஆயிரம் முகங்களுடன் கூடியவரு மான ஆதிசேஷனாலும் இயலாது. அதற்குக்காரணம் உபநிடதத் தில் யாதொரு வஸ்துவின் மஹிமையை அறியமுடியாமல் மனத் துடன்கூட வாக்கும் திரும்பிவிடுகின்றது என்று கூறியிருப்பதே யாகும். ஆதிசேஷனால் துதிக்கமுடியாவிட்டாலும் நமஸ்காரமா வது செய்யலாமோவென்றால் பல்லாயிரக் கணக்கான விசித்திர மான பல ரூபங்கள் பூமியிலேயே விளங்குவதாக யஜுர்வேதத் தில் ஸ்ரீ ருத்திரத்தில் சொல்லியிருப்பதால் அதுவும் முடியாது என்று ஏற்படுகின்றது. பிரமத்தையுத்தேசித்துக் கூறப்பட்ட உபநிடதார்த்தங்களை மானிடரூபியாய் இருக்கும் குருவினிடம் எங்ஙனம் கூறலாமென்று சங்கிப்பதும் சரியல்லவென்பதையுமறி விக்கிறார். எங்களுடைய குருவானவர் பிர்மஸ்வரூபமேயன்றி, வேறல்ல. “இக்கருத்தையே, ஸ்ரீ குருதான் பரம்பொருள்” என்றுமறைகளும் மொழிகின்றன. இதினால் “ஸாமான்யஜனங்க ளால் இவர்களுடைய குணாதிசயங்களை நன்கறிந்துகொள்ளமுடி யாதென்பது திண்ணம்.”

ब्रह्मैवाहमिदं जगत्सु विदितं सर्वासु विद्यासु यत्
मायाविष्टतया विभिन्नमिव संदृष्टं पुनर्ज्ञानतः ।
मिथ्याभूतमिदं जगद्गुरुरहो शिष्येभ्य एवं दिशन्
संसारार्णवमध्यपातिविदुषां सेतुर्महान्दृश्यते ॥ ॥ २ ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌾𑌹𑌮𑌿𑌦𑌂 𑌜𑌗𑌤𑍍𑌸𑍁 𑌵𑌿𑌦𑌿𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍁 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌸𑍁 𑌯𑌤𑍍
𑌮𑌾𑌯𑌾𑌵𑌿𑌷𑍍𑌟𑌤𑌯𑌾 𑌵𑌿𑌭𑌿𑌨𑍍𑌨𑌮𑌿𑌵 𑌸𑌂𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌃 ।
𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌭𑍂𑌤𑌮𑌿𑌦𑌂 𑌜𑌗𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌰𑌹𑍋 𑌶𑌿𑌷𑍍𑌯𑍇𑌭𑍍𑌯 𑌏𑌵𑌂 𑌦𑌿𑌶𑌨𑍍
𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌰𑍍𑌣𑌵𑌮𑌧𑍍𑌯𑌪𑌾𑌤𑌿𑌵𑌿𑌦𑍁𑌷𑌾𑌂 𑌸𑍇𑌤𑍁𑌰𑍍𑌮𑌹𑌾𑌨𑍍
𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 ॥௨।

‘நம்மால் பார்க்கப்படும் ஸகலவஸ்துவும் பிர்மஸ்வரூபம்’ நானும் பிர்மஸ்வரூபமாக ஆகிறேன், நீயும் அந்த பிர்மரூபம்தான் என்று கூறும் உபநிடதங்களால் பிர்மமென்கிற ஒருவஸ்துதான் உண்மை யானதென்றும் மற்றுமுள்ள ஸகல வஸ்துக்களும் உண்மையல்ல வென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த அபிப்பிராயத் தையே,

भ्रामयन्सर्वभूतानि 𑌭𑍍𑌰𑌾𑌮𑌯𑌨𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 ।

என்கிற சுலோகத்தால் கீதாசார்யரும் கூறியிருக்கிறார். அஸத்தான ஜகத்தைவிட்டு ஸத்தான பிர்மஸ்வரூபத்தை அறிந்த வித்வான் இவ்விடத்திலே மோக்ஷத்தையடைகிறான் என்று இந்த ஜகத்குருவானவர் சிஷ்யாளுககுபதேசம் செய்துகொண்டு உலக வாழ்க்கையாகிற பெரும் கடலில் விழுந்து வெகுகாலமாக கரையேற வழியறியாமல் திண்டாடும் அற்பக்ஞானமுள்ளவர்களான ஸகல ஜனங்களுக்கும் பெரிய ஸேதுவாகவும் சர்மசக்ஷுஸ்ஸினால் கூட தர்சிக்கும்படியாயும் ஸ்ரீ ராமர்போல் தேசாந்திரங்களுக்குக் கூட எழுந்தருளி ஸஞ்சாரம்செய்து ஸ்ரீ ஜகத்குரு அவர்கள் தம் பக்தர்களை உஜ்ஜீவிக்கும்படி செய்கிறார்கள்.

ध्येयश्शम्भुरिति श्रुतावपि गुरुर्जोघुष्यते कारणं
नामाप्यस्यच रक्षितं शिवपदं श्रीपौरुषे मध्यगम् ।
त्वं वाहन्त्विति वेदमौलिपठितं श्रीशङ्करार्यं गुरुं
रुद्राभेदमिदं स्तुवन्ति सततं तेषां शिवं संभवेत् ॥ ॥ ३ ॥

த்யேயஶ்ஶம்புரிதி ஶ்ருதாவபி குருர்ஜோகுஷ்யதே
காரணம் நாமாப்யஸ்யச ரக்ஷிதம் ஶிவபதம் ஸ்ரீபௌருஷே
மத்யகம் । த்வம் வாஹந்த்விதி வேதமௌளிபடிதம் ஸ்ரீஶங்கரார்யம்
குரும் ருத்ராபேதமிதம் ஸ்துவந்தி ஸததம் தேஷாம் ஶிவம்
ஸம்பவேத் ॥ ॥ ௩ ॥

ஸகல ஜகத்திற்கும் காரணமானவர் சிவன்தான். அவரைத்தான் தியானம் பண்ணவேண்டும். புருஷஸூக்தத்தில்கூட சிவபதத்தை நடுவில் வைத்துத் தியானம பண்ணும்படி சொல்லியிருப்பதாலும் மற்றுமுள்ள பல சுருதிவசனங்களும் கூறுகிறபடியாலும் இந்த ஆசார்யாளை ஈசுவரனோடு பேதமில்லாமல் அபேதமாகவே, அதாவது ஈசுவரனுகவே எவர்கள் எப்பொழுதும் தியானிக்கிறார்களோ, அவர்களுக்கு எல்லாவிதமான க்ஷேமமுண்டாகுமென்று கருத்து.

காளி வித்வான் ரங்காசார்யார்,
தானதிகாரி,
புதுக்கோட்டை.

---

அன்னையூரில் வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீமான் ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா அவர்கள் தலைமையின்கீழ் ஒரு கூட்டம் கூடி எல்லோராலும் அடியில் கண்டவைகள் தீர்மானிக்கப் பட்டன.

1. மிஸ்மேயோ என்ற அமெரிக்க மாது பொதுவாக இந்திய நாகரீகங்களைப் பற்றியும் விசேஷமாக இந்தியமாதர்கள் கற்பைப் பற்றியும் எழுதிய பொய்யுரைகளைக் கண்டிப்பதோடு ஒருவரும் அப்புத்தகத்தை படிக்கலாகாதென வேண்டுகிறது.

2. தென்னாட்டிற்கு விஜயம்செய்த மகாத்மாகாந்தி அவர்கள் வர்ணாச்ரம விரோதமாகச் செய்துவரும் பிரஸங்கத்தைக் கண்டிப்பதோடு இனி அப்படி உபன்யஸிக்காமலிருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறது.

---

## விழுப்புரம் தாலுக்கா அன்னையூர் ஸரஸ்வதி விலாஸ
## மாணவர்சங்க ஐந்தாம் ஆண்டுவிழா.

ஷை சங்கஆண்டு விழாவிற்குத் தலைவராக சென்னையிலிருந்து பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா அவர்கள் 7—10—27 காலை 8-மணிக்கு ஏனைய உபன்யாஸகர்களுடன் வர, சங்கத்தினர் வாத்தியத்துடன் வரவேற்றனர். அதற்கென அமைக்கப்பட்ட அழகிய பந்தலில் பல நீதிவாக்கியங்களும் தோரணமும் தொங்கவிடப்பட்டிருந்தன. சங்கத் தலைவரும் அதைக் கண்டவருமான பிரும்மஸ்ரீ L. ராமச்சந்திரசாஸ்திரிகள் (ஹெட்மாஸ்டர்) அவர்கள் சபைத தலைமையை வஹிக்கும்படி பிரேரித்து ஸ்தோத்திரமானபிறகு வருஷாறிக்கையைப் படித்தார். தலைவர் "நவராத்திரி மாஹாத்மியம" என்பதுபற்றி ஒரு மணி வெகு அழகாக உபன்யஸித்ததும் மாலை 3-மணிக்கு சபை கூடுமெனக் கூறி கலைத்தார். ஈரோடிலிருந்து ஸ்ரீமான் உலகநாத முதலியார் என்ற உத்தியோகஸ்தர் சங்கத்தை வாழ்த்தியனுப்பிய கடிதம் படிக்கப்பட்டு நன்கொடையாக அளிக்கப்பட்ட இரண்டு நூல்களும் கொடுக்கப்பட்டது.

பிரும்மஸ்ரீ வாமதேவசாஸ்திரிகள் "ஸ்திரீதர்மம்" என்பதைக் குறித்து மிக ருசிகரமாக ஒருமணிநேரம் ராமாயணமேற்கோளுடன் உபன்யஸித்தார். ஸ்ரீமான் அண்ணாமலைபிள்ளை அவர்கள் அருணகிரிநாதர் சரிதத்தைக்குறித்து இனிய ஸங்கீதத்துடன பல பாட்டுகளையும் சுவையான கதைகளையும் கூறி மூன்று மணிக்குமேல் கேட்போர் மனமுருகும்படி உபன்யஸித்தார். பின்னர் மாணவர்கள் "சந்தேகம் விபரீதம்" என்பதைப்பற்றி அழகாக நடித்துக் காட்டினார்கள். தலைவர் "குருபக்தி" என்பதைப்பற்றி சிறியோருக்கும் பெரியோருக்கும் ஒத்தவழியில்; தற்கால முற்கால முறைகளுக்கேற்க இரண்டுமணி அத்புதமாக உபன்யஸித்தார். சங்கத்தின் மேல் நோக்கத்தையும் அங்கத்தினர் ஊக்கத்தையும் மெச்சி ஸ்ரீமான் கிருஷ்ணசாமி நாயுடு வந்தனோபசாரத்திற்குப்பிறகு சபையை இரவு 8½மணிக்கு முடித்தார். சந்தனதாம்பூலம் வழங்கப்பட்டு சபை கலைந்தது. பல உத்யோகஸ்தர்கள் வந்திருந்து சபையை நடத்தி கௌரவப்படுத்தியது ரொம்பவும் பாராட்டத் தக்கது.

C. ராமனாத அய்யா, அன்னியூர்.

---

## காந்தியடிகள் கூறும் விதவாமறுவிவாகத்திற்கு வங்காளப்பள்ளி ஆசாரியரின் மறுப்பும், அதற்கு காந்தியவர்கள் தமது "யங் இந்தியா" வில் கூறும் சமாதானம் சரியல்லவென்பதும்.

ஆரிய சகோதரர்காள்!

ஸஞ்ஞானமெனும் கற்பகத்தை உஜ்ஜீவிக்கச்செய்யும் அமிர்தவர்ஷம்போன்று ஸ்ரீ ஜகத்குருவின் திருவருளை சிரமேற்றாங்கி குருவாரந்தோறும் வெளிவந்துலாவும் "ஆர்யதர்ம"த்தின்கண் காந்தியடிகள் தற்காலம் செய்துவரும் தக்ஷிணயாத்திரையில் பச்சயப்பன் கல்லூரி மாணவர்களிடத்திலும் மற்றுமுள்ள பல்வேறிடங்களிலும் விதவைகளின் மறுவிவாகத்தைப்பற்றிச் செய்துவரும் பிரசாரத்தைக் கண்டித்து "காந்தி கூறும் விதவாவிவாஹத்திற்கு மறுப்பு" எனும் தலையங்கத்தின் கீழ் வெளிவந்த வியாஸத்தைக் கண்ணுற்றோம். ஆங்கு பற்பல சாஸ்திரக் கோட்பாடு

களுடனும் கீதாவசனங்களுடனும் விதவைகளின் மறுவிவாஹம் சாஸ்திரசம்மதமன்றென நன்குதுலக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் இதுவிஷயமாக வங்காளத்திலுள்ள ஓர் பள்ளியின் தலைமையாசிரியரால் காந்திக்கு எழுதப்பட்டுள்ள கடிதமும் அதற்கு காந்தியவர்கள் தமது "யங் இந்தியாவில்" வரைந்துள்ள பதிலும் சென்ற அக்டோபர்-மீ 10உ யன்றைய "ஹிந்து" வில் "பால்யவிதவைகளின் பரிதாப நிலை" என்ற தலையங்கத்துடன் பிரசுரிக்கப்பட்டிருந்ததும் எமது பார்வைக்கு எட்டியது. எனவே, முதன்முதலாக அவ்விரு கடிதங்களையும் மொழிபெயர்த்துப் பின்னர் அதுபற்றிய எமது அபிப்ராயத்தையும் வெளியிடுகின்றோம். ஈண்டு சுடுசாம் போற் கடுமொழிகள் தோன்றி நிற்பினும் அத்துணையும் பொது நலத்தின்பொருட்டுப் புகல்வதேயாதலால் அதைப் பொருட்செய்யாது கற்றவரனைவரும் தத்தம் அபிப்ராயங்களைத் தெற்றென வெளியிடுவார்களென்ற நம்பிக்கையுடன் விஷயத்தைத் துலக்குகின்றோம்.

வங்காளமாகாணத்திலுள்ள பள்ளியாசிரியர் காந்தியடிகளுக்கு எழுதுவதாவது:— "சென்னையிலுள்ள மாணுக்கர்களுக்கென நிகழ்த்திய சொற்பொழிவில் அவர்கள் விதவைச் சிறுமிகளையே மணத்தல் வேண்டுமென தாங்கள் வற்புறுத்திய வசனங்கள் எங்களுக்கோர் பெரும் நடுக்கத்தை யுண்டாக்கியபடியால் யான் மிகுத தாழ்மையுடன் எனது அழுத்தமான கண்டனத்தை இத்துடன் அனுப்புகின்றேன். தற்காலம் நமது ஹிந்து விதவைகளால் ஆயுள்வரை அனுஷ்டிக்கப்பெறுவதும், ஏனைய தேயங்களிலுள்ள பெண்மக்களிடத்தில் இல்லாததும் நமது பெண்மணிகளிடத்தே நிறைந்ததுமான மிகச் சிறந்த பான்மையெனப் பல்லோராலும் பரிவுடன் போற்றப்படுவதுமான 'பிரும்மசர்யம்' எனும் அரும்பெரும் நோன்பைத் தங்கள் புத்திமதியானது நாளடைவில் சீர்குலைத்துவிடுவதாக இருக்கின்றது. அன்றியும், அது நம்தேய மக்களைக் கேவலம் இவ்வுலக இன்பத்திலேயே கிடந்துழலும்படி செய்துவிடுமாகையால் ஓரே பிறவியில் பிரும்மசரிய விரதத்தை அனுஷ்டித்து ஈடேற்றமடைவதற்கு வழியின்றிப் போய்விடும். பெண்களின் விவாஹமென்பதே மிக்க சிரமமாகவும் பெரும் கவலைக்கிடமாகவுமிருக்கு மிக்காலத்தில் தாங்கள் விதவைகளிடத்து வைக்கும் தீவிரமான அனுதாபமும் உண்மை

யில் ஓர் பெருங்கொடுமையாய்விடும். ஏன்னெனில் விதவைகள் விஷயமாகத் தாங்கள் கொண்டுள்ள அபிப்பிராயங்கள் ஆத்மாவின் அழிவின்மை, மறுபிறப்பு, முத்தி முதலான இந்துமதத்தின் இலக்கியங்களுக்கு முற்றிலும் முறணாகவிருப்பதுமன்றி நாம் ஒரு சிறிதும் உவம்பாத பிறதேச ஜனஸமூகவாழ்க்கையின் தாழ்ந்த நிலைமைக்கு நம்மையும் உட்படுத்திவிடுமென்பதே எனது அபிப்பிராயம். தற்காலம் நமது இந்துஜன சுக வாழ்கையானது சீர்குலைந்து கிடக்கின்றதென்பது ஒருவாறு உண்மையாயினும், நாம் நம்மாலியன்றவரை இந்துமதத்தின் பெரு நோக்கங்களைக் கடைப்பிடித்து முன்னேற்றமடைய முயற்சிக்கவேண்டுமேயல்லாது பிரதேயங்களுக்கேற்ற ஜனஸமூகவாழ்க்கையையும் நோக்கங்களையும் பின்பற்றுவது சரியல்ல. இவ்விஷயத்தில் " அஹல்யாபாய், ராணி பவானி, ஸீதாதேவி, ஸாவித்ரீ, தமயந்திதேவி " முதலிய கற்பரசிகளின் திவ்ய சரித்திரங்களே நாம் பின்பற்றவேண்டிய உதாரணங்களாகவும் அப்புண்ணிய வழிகளின் பெருநோக்கங்களே நமது ஸ்திரீசமூக வாழ்க்கையைச் சீர்திருத்துவதற்குற்ற துணைகளாகவும் விளங்குகின்றன. ஆகவே யான் தாங்கள் இது போன்ற விஷயங்களில் தலையிடாமலிருக்கும்படிக்கு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்."

முற்கூறப்பட்டுள்ள இக்கண்டனக் கடிதத்திற்கு காந்தியடிகளும் பின்வருமாறு பதில் எழுதியுள்ளார்கள்:—

"இத்தகைய அழுத்தமான கண்டனத்தால் என் மனம் ஒரு சிறிதும் மாறுதலடையவில்லை. பிருமசரியத்தின் உயர்வை மனமார உணர்ந்து பின்பற்றும் விதவைகளைத் தடைசெய்வதற்காக எனது புத்திமதிகள் எழுந்தனவன்று. ஆனல், எனது வசனங்கள் பின்பற்றப்படுமேல்,பாணிக்கிரகணத்தின் உண்மைத்தத்துவத்தை அறியுமுன்னரே விவாகஞ்செய்விக்கப்பெற்றுப் பின்னர் புருஷனை யிழந்த சிறுமங்கையரின் துக்கத்தை அவை நிச்சயம் நிவர்த்தி செய்யுமென்பதே எனது அபிப்பிராயம். அச்சிறுமிகள் விஷயத்தில் விதவையென்னும் பதத்தையுபயோகிப்பது அப்பதத்தின் உண்மைப்பொருளுணராது செய்யும் அநீதியேயாகும். இம்முக்கிய நோக்கத்துடனேயே நமது நாட்டுச்சிறுவர்கள் அத்தகைய விதவைகளை விவாகஞ்செய்து கொண்டாலன்றி வேறு விவாகம் வேண்டுவதில்லையென யான் வற்புறுத்திக் கூறியது. இப்பால்ய

வைதவ்யம் என்னுங் கொடுமையொழிந்தபின்னரே தெய்வீகத் தன்மை பொருந்திய நமது இந்து தருமம் நன்கு பரிபாலிக்கப் பட்டு வருமென்பதே எனது முக்கிய நோக்கம்.

“பிரும்மசரியத்தை சரிவா அனுட்டிப்பதினாலேயே தான் விதவைகள் மோக்ஷமெனும் பேரின்பமெய்துகிறார்களென்றும் வார்த்தைக்கு அனுபவத்திலாதாரங்கிடையாது. முக்தியெனும் பெரும்பேறு அடைதற்கு பிரும்மசரியவிரதானுட்டானம் ஒன்று மட்டிற்போதாது. மற்றும் பற்பல சாதனங்களும் அதற்கு இன்றியமையாதவை அதுவன்றியில், பலாத்காரத்தின் காரணமாகப் பின்பற்றப்படும் பிரும்மசரியத்திற்கு உண்மையில் மதிப்பு ஏற்படாமல் போவதுமன்றி அது பற்பல ரகசிய துர்நடத்தைகளுக்கும் இடங்கொடுத்துத்தன துஜனசமூக வாழ்க்கைக்குற்ற நன்னெறிகளேயும் அறவே துலைத்துவிடுகின்றது. நிதர்சனமாகவறிந்தே யான் இவற்றை யெழுதுகின்றேனென்பதை முற்கூறிய கண்டனக்கடித்மெழுதிய வங்காளப்பள்ளியாசிரியருக்கு யான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆத்துமாநித்தியம், மறுபிறப்பு, முத்தியெனும் இந்துமதத்தின் கொள்கைகட்கும் யான் விதவாவிவாகத்தைப் பற்றிக்கொண்டுள்ள அபிப்ராயங்கள் முரணானவையன்று. கீழ்மக்களென நாம் அகங்காரத்துடன் கூறும் லக்ஷக்கணக்கான நமது இந்துமக்கள் இவ்விதவைகளின் புனர்விவாக விஷயத்தில் யாதொரு ஆக்ஷேபணையும் கொண்டிருக்கவில்லையென்பதையே நமது வாசகநேயர்களறிந்து கொள்ளவேண்டும் எனவே, வயது சென்ற விதவைகளின் மறுவிவாகமானது மேற்சொல்லிய கொள்கைகளுக்கு விரோதமாகாதெனில் யாதொரு அர்த்தமுமின்றி விதவைகளென விவரிக்கப்படும் சிறு நங்கையர் மறுவிவாக விஷயத்தில் நமது மதக்கொள்கைகள் எங்ஙனம் பாதிக்குமோ யாம் அறிகிலோம் இங்கு ஆத்துமநித்தியம், மறுபிறப்பு, முக்தி முதலாய மதக்கொள்கைகள்என் விஷயத்தில் கேவலம்கொள்கைகள் மாத்திரத்தில் இல்லையெனவும், தினசரி வானத்திலுதித்து நிற்கும் அம்பரமணிபோல் பிரத்தியக்ஷ நிதர்சனமான வஸ்துவெனவும் யான் வங்காளப்பள்ளியாசிரியருக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அவ்வித முக்தியெனும் பெரும் பதமடைதற்கே யான் இயன்றவரை பாடுபட்டுவருவதுமன்றி அப்பேரின்பத்தின் தியானமே இச்சிறு விதவைகளின் துயரைக்கண்டுசகிக்கவொண்ணாது

இத்தகைய பிராசாரத்திலிறங்கும்படி என்னைத் தூண்டியது. எனவே ஸீதாதேவி போன்ற மஹோன்மணிகளின் பெயர்களை துர்ப்பாக்கியமுள்ள பால்யவிதவைகளுக்கு உதாரணமாகப் புகட்டுவது நமது பேடிமையேயாம்.

"வேதநூற்களில் விதவைகளின்விரதானுட்டானத்தின்உயர்வைப்பற்றி வெகுவாகச் சிலாகிக்கப்பட்டிருப்பது பொருத்தமேயாயினும், யாமறிந்தமட்டில், வேதகாலத்தில் விதவைகளின் மறுமணத்தைக்குறித்து பலத்த ஆக்ஷேபணைகளிருந்தனவென நம்பத்தகுந்த ஆதாரங்களில்லையென்பதையே யான் கடைசியாகக் கூறுகின்றேன். அதுவுமன்றி, இப்பொழுது யான் செய்துவரும் மதவிஷயமான யுத்தமும் உண்மை விதவைகளைக் குறித்ததன்று. மற்றேவெனில், தவறாக விதவைகளெனக் கூறப்பட்டுவரும் சிறுமங்கையர்களைப்பற்றியதேயாகும். எனவே, அச்சிறுமிகளை விதவைகளென்று கருதாது அவர்கள் தற்காலம் அனுபவித்துவரும் சகிக்கவொண்ணாத் துன்பத்தை நிவர்த்திப்பதே காருண்யமுள்ள ஒவ்வொரு இந்துவின் கடமையாதல்பற்றி, விவாகமாகாத ஒவ்வொரு இந்து மாணாக்கனும் யாதொரு அர்த்தமுமின்றி விதவைகளெனப் பிரிதாக விவகரிக்கப்படும் இச்சிறுமிகளையே மணக்கவேண்டுமென்றும் அவ்விதமில்லாவிடில் விவாகமே செய்துகொள்ளக்கூடாதென்பதுமான எனது புத்திமதிகளை மீண்டும் இந்து வாலிபஜன சமூகத்திற்குயான் அழுத்தமாகவற்புறுத்துகின்றேன்"

யாம் இதுகாறும், இவ்விதவா விவாஹத்தைப்பற்றி காந்தியடிகள் விடுத்துள்ள பதிலை மொழிபெயர்த்ததின் முக்கியகாரணம் ஆங்கிலத்திற்பயிற்சியற்ற புராதனப் பண்டிதமணிகள் இதைக் கண்ணுற்று தாங்களும் இதுவிஷயத்தில் இறகேந்தி காந்திதாம் கொண்ட அபிப்பிராயத்தை நன்குகண்டித்து இதுபற்றிய சாஸ்திரசம்மதமான சித்தாந்தத்தை விரிவாகவும் தெளிவாகவும் வெளியிடுவார்களென்ற நோக்கத்துடனே யாம் அத்தகைய பூரணநம்பிக்கையுடன் யாமும் அதுபற்றிய எமதுபின்வரும் அபிப்பிராயங்களை வெளியிடுகின்றோம்.

ஐயன்மீர்! நமது இந்துக்களால் அனுட்டிக்கப்படும் இவ்விவாகமானது கேவலம் இவ்வுலகில் சிற்றின்பபோகங்களை மாத்திரம் பெறுவதற்கெனவேற்படுத்தப்பட்ட ஓர் ஸம்ஸ்காரமன்று. மற்றேவெனில் இல்லறதருமத்தைச் சரிவர நடத்துவதற்கும்

அதன்மூலமே பேரின்பசுகத்திற்குற்ற சாதனங்களைத் தேடிக் கொள்ளுவதற்குமென விதிக்கப்பெற்றதோர் அற்புத ஸம்ஸ்காரம். குலமகட்குக் கொண்டகணவனே தெய்வம். அவன் உயிருடனிருக்குங்காலத்திலும் சரியே அவன் இறந்தபின்பும் சரியே அவர்கட்கு அப்பதிபக்தியைத் தவிர்த்து வேறு அனுட்டானங்கள் விதிக்கப்படவில்லை. புருஷன் மரித்தபின்னரும் சிறந்த நியமங்களுடன் அப்பதியே தன் குலதெய்வமெனப்பாவித்து அவனை மனமாற நினைந்து போற்றிவரும் மனைவி தான் மறித்ததும் சுவர்க்கத்தையடைவதாக நமது மதநூற்களின் சித்தாந்தம். இக்கருத்தையே,

मृते भर्तरि या नारी ब्रह्मचर्यव्रते स्थिता ।
सा मृता लभते स्वर्गं यथा ते ब्रह्मचारिणः ॥

ம்ருதே பர்த்தரி யா நாரீ ப்ரஹ்மசர்யவ்ரதே ஸ்திதா ।
ஸா ம்ருதா லபதே ஸ்வர்க்கம் யதா தே ப்ரஹ்மசாரிண: ॥

என்ற சுலோகத்தால் பராசரரும்,

मृतं भर्तारमादाय ब्राह्मणी वह्निमाविशेत् ।
जीवन्तीचेत् त्यक्तकेशा तपसा शोषयेद्वपुः ॥

ம்ருதம் பர்த்தாரமாதாய ப்ராஹ்மணீ வஹ்நிமாவிஶேத் ।
ஜீவந்தீசேத் த்யக்தகேஶா தபஸா ஶோஷயேத்வபு: ॥

என்ற வசனங்களால் வசிஷ்டமாமுனியும் நன்கு வெளியிட்டிருக்கின்றார்கள். பதியையிழந்த நமதுகற்பரசிகள் அனுட்டிக்கும் இப்பிரும்மசரியவிரதத்தையே மற்றைய நாட்டினர் மிக்க அத்புதமெனவதிசயிக்கும் ஓர் சிறந்த பேரணியென நமது வங்காளப் பள்ளியாசரியர் வியந்துகூறியது. இவ்விதமிருக்க, தான் வருணாச்ரமியென்றே இன்றைவரைச் சொல்லிக்கொண்டுவரும் எமது காந்தியடிகள் "பிரும்மசரியத்தை அனுட்டிப்பதனாலேயேதான் விதவைகள் மோக்ஷமெனும் பேரின்பமெய்துகின்றார்கள்என்னும் வார்த்தைக்கு அனுபவத்தில் ஆதாரங்கிடையாது" என்று எங்ஙனம் புகலத்துணிந்தரென எமக்கு விளங்கவில்லை. தற்காலத்திலும் எமது காந்தியடிகள்போன்றவர்களும் மற்றும் பல சமாஜத்தார்களும் செய்துவரும் பலத்த எதிர்பிரசாரங்களையும் பொருட்செய்யாது இந்நாள்வரை மேன்மைதங்கிய அப்பிரும்மசரிய விரதமானது வைதவ்யமடைந்த நமது பெண்மக்களால் நன்கு பரிபாலிக்

கப்பட்டு வருகின்றதென்பதே நாம் கண்கூடாகப்பார்க்கும் ஆதாரமன்ரோ? அதுவன்றி எமது காந்தியடிகள் கூறும் பலாத்காரத்தின்காரணமாக இத்தகைய பிரும்மசரியம் பின்பற்றப்படுமேல் அது பல்லாயிரமாண்டுகளுக்கு முந்தியதெனப் பலராலும் கருதப்படும் நமது ஸ்மிருதி புராணங்கள் காலம் முதற்கொண்டு இதுவரையில் அழிவுறாது நிலைத்துநிற்கக்கூடுமா ? ஒருக்காலுமில்லை. புண்ணியபூமியாகிய இப்பரதகண்டத்திலுள்ள பெண்மக்களின் மனதில் பிரும்ம்சரியமென்ற ஒப்புயர்வற்ற நோன்பே பதிபக்த சிரோமணிகளான விதவைகளுக்கு முக்தியளிக்கவல்லதென்றும், அதுவே ஸத்தியமெனவும் தோன்றி அத்தகைய ஸத்தியவிரதானுட்டானத்தில் ஓர்வித ஆக்கிரகமும் அதற்குற்ற தேசகாலபரிபக்குவமும் பொருந்தியிருந்தாலன்றி அப்பிரும்மசரியமும் காந்திதான்கொண்ட ஒத்துழயாமை இயக்கத்தைப்போல் ( Non-Co-operation movement ) ஒரு சிறுகாலமே மிக்கவார்ப்பாடத்துடன் நமது புண்ணியபூமியிற்றுண்டவமாடி பின்னர் இருந்தவிடந்தெரியாது மறைந்துபோயிருக்கும். அதுவுமன்றி அந்த விரதானுட்டானத்தில் ஓர் தீவிரமான பற்றுதலும் தேசகாலபரிபக்குவமும் இல்லாவிடில் தீர்க்கதரிசிகளான எமது முன்னோர்களும் அதற்குற்ற சாஸ்திரங்களை எழுதிவைக்க முன்வந்திருக்கமாட்டார்கள்.

(தொடரும்)

ப. வ. கணபதிசாஸ்திரி,

ஓம்

கோவல் வீரட்டானம்

## ஆர்யதர்மாபிவிர்த்தினி ஸபை.

16-வது ஆண்டு நிறைவுவிழா மஹோபந்நியாஸ

# அழைப்புப் பத்திரம்.

ஆர்யதர்மானுஷ்டான சீலர்களே !

நிகழும் ப்ரபவ ஆண்டு ஐப்பசித் திங்கள் 20, 21, 22ல (5, 6 7—11—27) சனி, ஞாயிறு, திங்கள் கிழமைகளில் மேற்கண்ட ஸபையின் வருடோற்சவம் நம்நகர் கோவல்வீரட்டம் ஸ்ரீபிருகந்நாயிகாஸமேத ஸ்ரீவீராட்டஹாஸேச்வரஸ்வாமி ஸந்நிதி முன்மண்டபத்தில் நடைபெறும்.

அவ்வமயம் சென்னை உயர்தர நீதிமன்றம், நியாயநிபுணர் பிரும்மஸ்ரீ T. R. இராமச்சந்திர ஐயரவர்கள் பி. ஏ., பி. எல்., இச்சபைக்குத் தலைமைவஹிக்க இசைந்துள்ளார்கள்.

ஸ்ரீகாஞ்சி காமகோடிபீடாதிபதிகளான கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளும் தமது ஸ்ரீமடம் ஆஸ்தான பண்டிதர் மஹோபதேசக கவிரத்நம் பிரம்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்களை சபைக்கு விஜயம் செய்வித்து ஸபையை நன்கு நடத்த அனுக்ரஹபூர்வமாக ஆசீர்வதித்துள்ளார்கள்.

அறிஞர்கள் பலர் அரிய உயர்நலம் வாய்ந்த பல சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள்.

ஆர்யதர்மாபிமானமும் ஆஸ்திகபுத்தியும் பகவத்பக்தியும் நிறைந்துள்ள தாங்கள் தங்களன்பர்கள் பலருடன்வந்திருந்து சிரவணஞ்செய்து ஆன்மலாபப்பேற்றை யடைந்தானந்திக்க வேண்டுகிறோம்.

இப்படிக்குத் தங்களன்புள்ள,

**ஆர்யதர்மாபிவிர்த்தினி ஸபையார்,**

---

## நடை முறைக் குறிப்பு.

பிரபவ ஆண்டு ஐப்பசித்திங்கள் 20, 21உ (நவம்பர் 5, 6உ) சனி, ஞாயிறுஆகிய இருதினங்களில் சென்னை உயர்தரநீதிமன்றம் நியாயநிபுணர், பிரம்மஸ்ரீ T. R. இராமச்சந்திர ஐயரவர்கள், பி.ஏ., பி. எல்., தலைமை வஹிப்பார்கள்.

மூன்றாவது தினமாகிய ஐப்பசித்திங்கள் 22உ (7—11—27) திங்கட்கிழமையன்று ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகளின் ஆஸ்தானபண்டிதர் மஹோபதேசக கவிரத்நம் பிரம்மஸ்ரீ பஞ்சாபகேசசாஸ்திரிகள் தலைமை வஹிப்பார்கள்.

சென்னை அமரகலாவிலாஸனி ஸபை, பிரசங்கவர பிரும்மஸ்ரீ வே. சோமதேவசர்மா அவர்கள் முக்திஸாதனம், ஜீவகதி, பிறப்பும் இறப்பும்.

கும்பகோணம் ஸ்ரீமடம் ஆஸ்தானபண்டிதர் கவிரத்நம் பிரும்மஸ்ரீ ப. பஞ்சாபகேசசாஸ்திரிகள் சாஸ்திரீயவிவாஹமும் அதன் மேன்மையும்.

பிரம்மஸ்ரீ கோபிநாதசாரியார் அவர்கள் ஆர்யதர்மம்.

கோவல் நியாயவாதி உ. வே. ஸ்ரீ, தி. ஆராவமுது தாதாசாரியாரவர்கள் ஸ்ரீமத்ராமாயண ஆராய்ச்சி.

பிரும்மஸ்ரீ வாழ்கொடை சுப்பராமகனபாடிகள் அவர்கள் "தைத்தரீய உபநிஷத்பாஷ்ய விளக்கம்"

முறையே 3-தினங்களிலும் உபந்யஸிக்கப்பெறும்.